மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.5 |
| பெயர் | V.சசிகுமார் | நாள் | 14.12.2022 |
| தகப்பனார் பெயர் | வெங்கடாச்சலம் | | |

**வாதிகள் தரப்பில் வா.சா.5 முதல் விசாரணை சாட்சியம்:-**

1) நான் கடந்த 15.09.2022ம் தேதியிலிருந்து சூரப்பள்ளி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் அதன் சான்று நகல்களை தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

2) சூரப்பள்ளி கிராம ச.எண்.252/5ன் மொத்த விஸ்தீரணம் 0.04.0 ஏர்ஸ் ஆகும். மேற்படி சர்வே எண்ணிக்குண்டான அடங்கல், அ பதிவேடு, கணிணி அ பதிவேடு, சிட்டா, புலவரைபடம் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல்களின் கோர்வை **வாதி தரப்பு சாட்சியின் சான்றவாணம் சா.சா.ஆ.5 (வரிசை) (Ex.X5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்படி சா.சா.ஆ.5 சான்றவாணத்திலேயே ச.எண்.252/10 மற்றும் ச.எண்.252/11 ஆகியவற்றிற்குரிய புல வரைபடம், அ பதிவேடு, சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவை பற்றிய பதிவுகளும் அடங்கியுள்ளது.

4) ச.எண்.252/5ல் உள்ள நிலத்தை நான் 13.12.2022ம் தேதியில் பார்வையிட்டேன். ச.எண்.252/5ல் என்ன உள்ளது என்றால், ஒரு வில்லை வீடு உள்ளது. அந்த வில்லை வீட்டிற்கு கதவு எண் குறிப்பிடப்படவில்லை.

5) நான் கொண்டு வந்துள்ள அ பதிவேட்டில் ச.எண்.252/10, ச.எண்.252/11 ஆகிய உட்பிரிவுகள் உள்ளது. ச.எண்.252/10ல் 0.02.5 ஏர்ஸ் நிலமும், ச.எண்.252/11ல் 0.01.0 ஏர்ஸ் நிலமும் உள்ளது.

6) சா.சா.5 வரிசையில் உள்ள அடங்கல் 1426 பசலிக்குரியது. அதில் ச.எண்.252/10, ச.எண்.252/11 ஆகிய புல எண்களின் மாரியப்பன் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.5ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.